# 14-04-2024 செய்தி

## இந்தியாவில் 23 லட்சம் ஹெக்டெர் பரப்பளவிலான மரங்கள் அழிப்பு

- இந்தியாவில் கடந்த 24 ஆண்டுகளில் 23 லட்சம் ஹெக்டெர் பரப்பளவிலான மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச வன கண்காணிப்பு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 2002 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் 4.14 லட்சத்து ஹெக்டெர் பரப்பளவிலான ஈரமான முதன்மை காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.
- இதையடுத்து கடந்த 24 ஆண்டுகளில் 23 லட்சம் ஹெக்டெர் பரப்பளவிலான மரங்கள் அழிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.
- கரியமில வாயு சேமிப்பு : கடந்த 2001 முதல் 2022 வரை இந்தியாவில் உள்ள காடுகள் ஆண்டுக்கு 5.1 கோடி டன் அளவிலான கரியமில வாயுவை உமிழ்ந்துள்ளன.
- இதே காலகட்டத்தில் 14.1 கோடி டன் அளவிலான கரியமில வாயு நீக்கப்பட்டது. இதன்மூலம் ஆண்டுக்கு மொத்தம் 8.9 கோடி டன் அளவிலான கரியமில வாயு சேமிக்கப்பட்டுள்ளது.
- காற்றில் கரியமில வாயு கலந்திருந்தால் அதை நீக்குவதிலும் மரங்கள் மொத்தமாக அழிக்கப்படும்போது கரியமில வாயுவை உமிழ்வதிலும் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**வன அழிப்புக்கான காரணங்கள்**

- மனித இடம்பெயர்வு, இயற்கை சீற்றங்கள் உள்ளிட்டவை மர அழிப்புக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.
- அந்த வகையில் இந்தியாவில் 2013 முதல் 2023 வரை 95 சதவீத வன அழிப்பு சம்பவங்கள் இயற்கை சீற்றங்களாகவே நிகழ்ந்துள்ளன என தெரிவிக்கப்பட்டது.

**காட்டுத்தீயால் ஏற்படும் வன அழிவு**

- உணவு மற்றும் வேளாண் நிறுவனம் (எஃப் ஏஓ) வெளியிட்ட தரவுகளில் கடந்த 2015 முதல் 2020 வரை இந்தியாவில் ஆண்டுதோறும் 6.68 லட்சம் ஹெக்டெர் பரப்பளவிலான மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.
- இதன்மூலம் மர அழிப்பில் உலகளவில் இந்தியா இரண்டாமிடத்தை பிடித்துள்ளது.

## விண்வெளிக்கு முதல் இந்தியராக சுற்றுலா செல்லும் கோபி தோட்டக்குரா

- அமேசான் நிறுவனர் ஜெஃப் பெஸோஸின் ப்ளூ ஒரிஜன் நிறுவனம் மூலம், ஆந்திரத்தைச் சேர்ந்த கோபி தோட்டக்குரா என்பவர் விண்வெளிக்குச் சுற்றுலா செல்ல உள்ளார்.
- இதன் மூலம் விண்வெளிக்கு சுற்றுலா செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.
- அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு ப்ளூ ஒரிஜன் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.
- விண்வெளிக்கு சுற்றுலா அழைத்துச் செல்ல அந்த நிறுவனம் சார்பில், நியூ ஷெப்பர்ட் என்ற ஏவுகலன் மூலம் 7ஆவது முறையாக மனிதர்கள் விண்வெளிக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.